# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.26/2018 நாள். 18.5.2018

## தனி அலுவலர் அவர்களின் மே 2018 மாதம் அவசர கூட்டப்பொருள்

18.5.2018ம் நாள் திங்கள்கிழமை காலை 4.00 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் அவசரக் கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்கு சொந்தமான 18 வார்டுகளில் உள்ள கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிப்பது குறித்து தமிழ்நாடு அரசிதழ் எண்.33, நாள் 25.01.2018ல் கீழ்வருமாறு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920–ம் ஆண்டு சட்ட பிரிவுகளில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திருத்தங்கள் செய்யப்பட்ட சட்ட பிரிவுகளின்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு சொத்துவரி வரிவிதிப்பு செய்யவும், மேற்படி சட்ட பிரிவுகளில் திருத்தம் செய்யப்பட்டு சொத்துவரி வரிவிதிப்பு செய்யப்படுவதை பொதுமக்கள் அறியும் வகையில் 05.04.2018 அன்று ஏற்கனவே கீழ்க்கண்ட வரைவு அறிவிக்கை செய்தித்தாளில் வெளியிடப்பட்டது.

1. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920,பிரிவு 83(1) (சி) –ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரியிலிருந்து விலக்களிக்கவும்.
2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920,பிரிவு 83(1)(சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்கள் தவிர்த்து கல்வி பயன்பட்டிற்கான கட்டிடங்கள் தவிர்த்து கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்துவரி விதிக்கவும்.
3. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83(1)(சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்.
4. கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்களின் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்க்கு விதிக்கப்படும் 1.5 மடங்கு சொத்துவரியாக விதிக்கவும்.
5. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920,பிரிவு 83(1)(சி)–ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட அறிவிக்கை மீது இதுவரை ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதும் பெறப்படவில்லை.

எனவே, மேற்கண்ட வரைவு அறிவிக்கையினை உறுதி செய்து இறுதி அறிவிக்கை வெளியிடவும் அதனை மாவட்ட அரசிதழில் வெளியிட நடவடிக்கை தொடரவும் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 2**

அனகாபுத்தூர் நகராட்சியின் மொத்த பரப்பளவு 4.00 சதுர கி.மீ ஆகும். இந்நகராட்சி எல்லைக்குட்பட் பகுதிகளில் உள்ள மக்கள் தொகை சுமார் 48050 கொண்டது. இந்நகரம் 18 வார்டுகளையும் உள்ளடக்கியதாகும். ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் அரசாணை எண்.162, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.12.2014ன் படி ரூ18.08 கோடி மதிப்பீட்டில் நகரம் முழுமைக்குமான குடிநீர் அபிவிருத்தி திட்டம் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மூலம் நடைபெற்றுக் கொண்டுயிருக்கிறது. மேற்படி திட்டத்தில் 2 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் அமைக்கும் பணி மற்றும் 55.03 கி.மீ நீளத்திற்கு பைப்லைன் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

தற்போது நகர்பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களுக்கு மொத்தம் 10884 சொத்துவரி விதிப்புகள் உள்ளன. இந்த சொத்துவரி இனங்களில் 6289 எண்கள் மட்டுமே குடிநீர் இணைப்பு இதுநாள்வரை பெறப்பட்டுள்ளன. இந்நிலையால், குடிநீர் வழங்கல் மற்றும் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்குரிய செலவினங்கள், மின் கட்டண செலவினங்கள் மிகுதியடைந்து வருவதை எதிர்கொள்ள இயலாத நிலை உள்ளது. இந்நிலையினை கருத்தில் கொண்டு, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களால், 21.03.2018–ந் தேதிய கலந்தாய்வுக் கூட்டத்தில், பொதுக்குழாய்களை தவிர்க்கவும், இயக்குதல் மற்றும் பராமரித்தல், மின்கட்டண செலவினங்களை எதிர்கொள்ள, அனைத்து சொத்துவரி குடியிருப்புகளுக்கும், குடிநீர் குழாய் வீட்டிணைப்புகள் வழங்கிட தெளிவுரை வழங்கப்பட்டது.

இப்பணிக்காக ஒரு குடிநீர் குழாய் இணைப்பில், பல குடியிருப்புகள் பயன்பாடு மேற்கொள்ளப்படுவதை கணக்கிட்டும், மீதமுள்ள குடியிருப்புகளுக்கு, புதிதாக குடிநீர் இணைப்புகள் வழங்கவேண்டியதை கணக்கீடு செய்யப்பட்டதில், இன்னும் 4501 புதிய குடிநீர் இணைப்புகள் வழங்க வேண்டியுள்ளன. இப்பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் நிர்வாக அனுமதி மற்றும் முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை–5 அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கும், இப்பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.162.00 இலட்சத்திற்கும், தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மூலம் வட்டியில்லா கடானக நிதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி